## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE-I, PUDUCHERRY

## CC No. 818/2023

Deposition of LW-1/PW- 1 Witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. மோகனப்பிரியா |
| **Father's** / Husband Name | : | திரு. சுப்பரமணியன் |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 and Rule 35 and 37 of the Criminal Rules of Practice, 2019 on **14.07.2026**

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

**1.** 2021 ஆம் ஆண்டுதான் வரதட்சனை கேட்டு கொடுமைப்படுத்துவதாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் 2020 இல் புகார் அளித்தேன். இந்த புகாருக்கு முன்பு வரதட்சனை தொடர்பாக கொடுமை நடைபெற்றது என நான் எந்த புகாரும் வழங்கவில்லை என்று சொன்னால் சரிதான். அதற்கான காரணத்தை எனது புகாரில் குறிப்பிட்டுள்ளேன். இந்த புகாருக்கு பிறகு மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறையில் என்னை விசாரித்தார்கள் என்றால் முதலில் என்னை விசாரிக்கவில்லை. அதன் பிறகு அவர்கள் தவறாக வழங்கிய அறிக்கையை எதிர்த்து நான் புகார் அளித்தேன். பின்பு தான் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் வழங்கியதுதான். நான் சொன்தை எனது நண்பர் அதை எழுதினார். அந்த நண்பரின் பெயரை குறிப்பிட நான் விரும்பவில்லை. (**அந்த ஆவணம் எ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). வரதட்சனை தடுப்பு பிரிவு அலுவலர் என்னையும் எனது அண்ணன் சுபாஷனையும் விசாரித்தார். அதன் அடிப்படையில் தான் திருமணத்தின்பொழுது வரதட்சனை கேட்கப்படவில்லை என வரதட்சனை தடுப்பு பிரிவு அலுவலர் முடிவு எடுத்தார் என்றால் தவறு. திரு. சௌந்தர்ராஜன் என்னை விசாரிக்கவில்லை. என்னை மகளிர்

CHERALADHAN

Digitally signed by CHERALADHAN
Date: 2026.07.14 17:28:18 +0530

மேம்பாட்டுத்துறையினர் முதலில் விசாரிக்காமல் அறிக்கை வழங்கியதாக கூறவது தவறு என்று சொன்னால் சரியல்ல. வரதட்சனை தடுப்பு பிரிவில் குழு அமைக்கப்பட்டு என்னிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அந்த குழுவும் எனது புகார் அடிப்படை முகாந்திரமற்றது என அறிக்கை வழங்கினார்கள் என்றால் சரிதான். எனது ஆவணங்களை முழுமையாக பரிசீலனை செய்யாமல் அந்த அறிக்கை வழங்கப்பட்டது.

2. அந்த குழு வழங்கிய அறிக்கையில் நான் அந்த விசாரணையை மேன்மையான முறையில் மேற்கொள்ள தடையாக இருப்பதாகவும் அந்த விசாரணையின் முடிவை எனக்கு சாதகமானதாக மாற்றுவதற்கு அந்த குழுவினரை அச்சத்திற்கு உட்படுத்தியதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் புகார் வழங்கியதன் காரணமாக காழ்ப்புணர்ச்சியில் மேற்கொள்ளப்பட்ட பதிவு ஆகும். நான் முதல் விசாரணையில் சொன்ன ரூ. 2,00,000/- எனது உருளையன்பேட்டை IOB வங்கி கணக்கில் வைப்பு செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ. 13 ஆவணத்தில் இருந்து நானும் எனது சகோதரரும் அந்த வங்கி கணக்கில் இருந்து பல்வேறு தேதிகளில் பணம் எடுத்துள்ள விவரம் துலங்கும் என்று சொன்னால் சரிதான். ரூ. 2,00,000/- எனது உருளையன்பேட்டை IOB வங்கி கணக்கில் வைப்பு செய்யப்பட்ட விவரம் ஆவணங்களில் துலங்காது என்று சொன்னால் தவறு. 28.10.2020 அன்று நடைபெற்றதாக சொல்லப்படும் நிகழ்வு குறித்து எ.சா.ஆ. 2 ஆவணத்தில் குறிப்பிட்டேனா என்றால் எனக்கு நினைவில் இல்லை. எ.சா.ஆ. 2 ஆவணத்தில் 28.11.2020 அன்று 11.00 மணிக்கு ஒரு நிகழ்வு நடைபெற்றதாக 17 ஆவது பக்கத்தில் 2 வது பத்தியில் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சாட்சி அந்த ஆவணத்தை பார்த்துவிட்டு அவ்வாறு குறிப்பிடவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார்.

CHERALADHAN
Digitally signed by CHERALADHAN
Date: 2026.07.14 17:28:24 +0530

3. எ.சா.ஆ. 2 ஆவணத்தின் 17 வது பக்கத்தில் 2 வது பத்தியில் குறிப்பிட்டுள்ள பொருண்மைகளுக்கு மாறாக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் தவறு. நான் இந்நீதிமன்றத்தில் எதிரிகள் மீது மேற்சொன்ன ஆவணத்திற்கு முரணாக பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளேன் என்றால் தவறு. எனது அண்ணன் அவசர ஊர்திக்கு தொடர்பு கொண்டார் எந்த அண்ணன் என்று எனக்கு நினைவில் இல்லை. அவருக்கு யார் தகவல் சொன்னார் என்று தற்பொழுது எனக்கு நினைவில் இல்லை. 28.10.2020 அன்று நிகழ்வு தொடர்பாக முதலில் காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டார்கள். அதன் பிறகு பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது. அதன் பிறகு 03.11.2020 அன்று எழுத்துபூர்வமாக மகளிர் காவல் நிலையத்தில் புகார் பெறப்பட்டது. அந்த புகாரில் 28.10.2020 அன்று நடைபெற்ற நிகழ்வு குறித்து குறிப்பிட்டுள்ளேன்.

4. டிசம்பர் 2020 அம் ஆண்டு முதலாவது எதிரி திருமண முறிவு வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் பின் தேதியிட்டு இந்த புகாரை வழங்கியுள்ளேன் என்றால் தவறு. அந்த வழக்கில் எனக்கு எதிராக கடந்த 15.03.2021 இல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால் நான் பின் தேதியிட்டு கடந்த 03.05.2021 அன்று இந்த வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் தவறு. ரூ. 16,10,000/- முதலாவது எதிரியிடம் கொடுக்கப்பட்டதாக ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. நான் பணம் வழங்கப்பட்டது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் தவறு. எனது தாயார் சீட்டு கட்டியதற்கு ஆவணங்கள் எதுவும் காவல் துறையினரிடம் ஒப்படைக்கவில்லை. சீட்டு கட்டியதாக நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. முதல் விசாரணையில் விந்து பரிசோதனை மேற்கொண்டதாக ஆவணங்கள் ஏதேனம் உள்ளதா என்றால் என் கைவசம் இல்லை.

CHERALADHAN Digitally signed by CHERALADHAN Date: 2026.07.14 17:28:29 +0530

**5.** மருத்துவர் கீதா எழில்ராஜனிடம் எனக்கு தேவையற்ற சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக சொல்வது பொய் என்று சொன்னால் தவறு. ஜிப்மரில் விந்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் என்னிடம் எதுவும் இல்லை முதலாவது எதிரியிடம் தான் உள்ளது. நான் உண்மைக்கு புறம்பாக முதலாவது எதிரியை இழிவு படுத்தவேண்டும் என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. IVF பரிசோதனைக்கென பணம் வழங்கப்பட்டதற்கு என்னிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை. அந்த பணம் ரொக்கமாக வழங்கப்பட்டது. எனது தாயாரின் பணத்தை கொடுத்ததாக கூறுவது பொய் என்று சொன்னால் தவறு. என் மீது மூன்று குற்றவியல் வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் தவறு. முதலாவது எனது உருளையன்பேட்டை வங்கி கிளையில் பல்வேறு தேதிகளில் ரூ. 3,50,000/- பணம் வைப்பு வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனது அண்ணனுக்காக நான் அந்த பணத்தை பெற்றுக் கொடுத்தேன் என்றால் தவறு. SPS நிறுவனத்தின் தேவைக்காக ரூ. 3,00,000/- பணத்தை எனது கணவரிடம் இருந்து எனது வங்கியின் கணக்கு வழியாக எனது அண்ணனுக்கு பெற்றுக் கொடுத்தேன் என்றால் தவறு. முதலாவது எதிரி எந்தவிதமான வேலையும் செய்யவில்லை.

**6.** முதலாவது எதிரி எனக்கு 22.06.2015 அன்று 49.05 கிராம் Neckless ம் 07.09.2015 அன்று 4.650 கிராம் மோதிரமும் 19.04.2018 அன்று 0.990 கிராம் தாளியும், இரண்டு தங்க சங்கிலிகளும் (16.053 மற்றும் 16.760 கிராம்) வாங்கி கொடுத்தார் என்றால் தவறு. முதலாவது எதிரியை தவிற இதர எதிரிகள் தனியாக வசித்து தொழில் புரிந்து வருகிறார்கள் என்றால் தவறு. நான் முதலாவது எதிரியுடன் வசித்து வந்த வீட்டில் இதர எதிரிகள் யாரும் ஒருபொழுதும் வசிக்கவில்லை என்று சொன்னால் தவறு. இதர எதிரிகளை பழிவாங்க வேண்டி ஒரு பொய்யான புகாரை வழங்கியுள்ளேன் என்று சொன்னால் தவறு. நானும் எனது சகோதரர்களும் பல்வேறு

CHERALADHAN Digitally signed by CHERALADHAN
Date: 2026.07.14 17:28:34 +0530

காலக்கட்டத்தில் முதலாவது எதிரியிடம் இருந்து ரூ. 11,50,000/- பணமும் சுமார் 11 பவுன் நகைகளும் பெற்றுக்கொண்டு, மேலும் பணம் பரிக்கவேண்டும் என்று ஒரு பொய்யான புகாரை வழங்கியுள்ளேன் என்றால் தவறு.

The testimony of the witness is taken down in the open court and was read over by me to the witness and the same was acknowledge by the witness to be true and correct.

CHERALADHAN

Digitally signed by CHERALADHAN
Date: 2026.07.14 17:28:40 +0530

Judicial Magistrate –I,
Puducherry.